தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2015–2016)

(பதினான்காவது பேரவை)

ஏழாவது அறிக்கை

(பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள் : 19 FEB 2016)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை–600 009.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2015–2016)

(பதினான்காவது பேரவை)

ஏழாவது அறிக்கை

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை–600 009.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பொருளடக்கம்

				பக்கம்
1.	2015–2016 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அமைப்பு	..		iii
2.	முகவுரை	..		v

இணைப்பு

1.	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் பின்வரும் ஆண்டறிக்கைகள் பேரவைமுன் காலதாமதமாக வைக்கப்பட்டது குறித்து அத்துறை அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் பரிந்துரை				
	அ. தமிழ்நாட்டில் ஊராட்சிகளின் பணி குறித்த ஆண்டறிக்கை	..	2006–2007	..	3
	ஆ. தமிழ்நாடு ஊரக வீட்டு வசதி மற்றும் உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டுக் கழகம்	..	2005–2006 முதல் 2009–2010 வரை	..	4-5
2.	உயர்கல்வித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் பின்வரும் மன்றம்/கழகம் ஆகியவற்றின் ஆண்டறிக்கைகள், ஆண்டுக்கணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கைகள் பேரவைமுன் காலதாமதமாக வைக்கப்பட்டது குறித்து அத்துறை அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் பரிந்துரை				
	அ. தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்	..	2009–2010 மற்றும் 2010–2011	..	6
	ஆ அண்ணா பல்கலைக் கழகம்	–	2005–2006 முதல் 2009–2010 வரை	..	7
3.	தகவல் தொழில் நுட்பவியல் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் ஆண்டறிக்கைகள் பேரவைமுன் காலதாமதமாக வைக்கப்பட்டது குறித்து அத்துறை அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் பரிந்துரை	–	2010–2011 மற்றும் 2011–2012	..	8
4.	சமூகநலன் மற்றும் சத்துணவுத்திட்டத் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் ஆண்டறிக்கைகள் பேரவைமுன் காலதாமதமாக வைக்கப்பட்டது குறித்து அத்துறை அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் பரிந்துரை		2005–2006 2010–2011 2011–2012 மற்றும் 2012–2013	..	9


தமிழ்நாடு சட்டமன்றம்
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2015–2016)

(பதினான்காவது பேரவை)

(2015–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30–ஆம் நாள் அமைக்கப்பெற்றது)

1. ***தலைவர்***

   திரு. ஆர். சின்னசாமி

உறுப்பினர்கள்

2. திரு. ம. கலை அரசு
3. திரு. கா. தமிழரசன்
4. திரு. என்எஸ்என். நடராஜ்
5. திரு. கே.பி. நாகராஜன்
6. திரு. V.P. நாகைமாலி
7. டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்
8. திரு. இரா. மணிமாறன்
9. திரு. பொன். ராஜா

செயலகம்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன் . . . செயலாளர்

திரு. க. பூபதி . . . இணைச் செயலாளர்

திரு. மா. கோபாலகிருஷ்ணன் . . . குழு அலுவலர்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2015–2016)

(பதினான்காவது பேரவை)

ஏழாவது அறிக்கை

முகவுரை

2015–2016–ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவராகிய நான் குழுவின் சார்பாக ஏழாவது அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

2015–2016–ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு 30.9.2015 அன்று அமைக்கப்பெற்றது.

குழுக் கூட்டம்


தமிழ்நாட்டில் ஊராட்சிகளின் பணி குறித்த ஆண்டறிக்கை, தமிழ்நாடு ஊரக வீட்டு வசதி மற்றும் உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம், அண்ணா பல்கலைக் கழகம், தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் ஆகியவற்றின் ஆண்டறிக்கைகள், ஆண்டுக் கணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கைகள் பேரவைமுன் காலதாமதமாக வைக்கப்பெற்றது குறித்து 13.10.2015 அன்று சென்னையில் நடைபெற்ற குழுக்கூட்டத்தில் சம்பந்தப்பட்ட துறைச் செயலாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் விளக்கம் அளித்தனர். குழுமுன் அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் கருத்துரைகள் மற்றும் பரிந்துரைகள் இவ்வறிக்கையின் இணைப்பில் அளிக்கப்பட்டுள்ளன.

16.02.2016–ஆம் நாளன்று சென்னையில் நடைபெற்ற குழுக் கூட்டத்தில் இவ்வறிக்கைக்கு குழு தனது ஒப்புதலை அளித்தது.

சென்னை–600 009,
16.02.2016
மன்மத, மாசி 4
திருவள்ளுவர் ஆண்டு–2047.

ஆர். சின்னசாமி
தலைவர்,
பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு

1. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

வரிசை எண்.	வாரியத்தின் பெயர்	நிதியாண்டு	பேரவைமுன் வைக்கப்பட வேண்டிய கால அளவு	பேரவைமுன் வைக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
அ.	தமிழ்நாட்டில் ஊராட்சிகளின் பணி குறித்த ஆண்டறிக்கை	2006–2007	31.03.2008	23.2.2009	10 மாதங்கள் 22 நாட்கள்

துறையின் பதில்
(7)

ஒவ்வொரு ஆண்டும் மாவட்ட பஞ்சாயத்தினுடைய பணி குறித்த அறிக்கை ஆண்டுதோறும் சட்டமன்றப் பேரவையில் தவறாமல் வைக்க வேண்டும். ஆண்டறிக்கை சமர்ப்பிக்கும்போது துறை அளவில் ஒரு ஆய்வு நடத்தினோம். நிர்வாகச் சூழல் காரணமாகத்தான் அறிக்கை சமர்ப்பிப்பதில் காலதாமதம் ஏற்பட்டது. தமிழ்நாடு ஊராட்சிகளின் பணி குறித்த 2006–2007–ஆம் ஆண்டுக்குரிய ஆண்டறிக்கை தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 166–இல் ஒரு திருத்தம் செய்து சட்டப்பிரிவு 166–A என்று திருத்தம் கொண்டு வந்ததால் மாவட்ட ஊராட்சிகள் மட்டுமல்லாது அனைத்து ஊராட்சிகளுடைய அறிக்கைகளும் காலதாமதமாக பேரவைமுன் வைக்கப்பட்டன.

குழுவின் பரிந்துரை
(8)

ஒரு நிறுவனம் அரசாங்கத்திடமிருந்து அதிகமான நிதிபெற்று நடத்தப்படும்போது, அதன் அறிக்கைகளை குறித்த காலத்தில் பேரவைக்கு அளித்தால் தான் அந்த நிறுவனத்தின் செயல்பாடு குறித்து உறுப்பினர்களால் தெரிந்து கொள்ள முடியும். எனவே, வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் அறிக்கையை பேரவைக்கு அளிக்கப்பெற வேண்டும். மேலும் ஆண்டறிக்கைகள் காலதாமதமாக பேரவைக்கு அளிக்கப்படும் நிலையில் தாமதத்திற்குரிய காரணங்களை விளக்கும் வகையில் சம்பந்தப்பட்ட அமைச்சரின் கையொப்பமிட்ட ஒரு விவர அறிக்கையை இணைத்து பேரவையில் வைக்க வேண்டும்.

வரிசை எண்.	கழகத்தின் பெயர்	நிதியாண்டு	பேரவைமுன் வைக்கப்பட்ட வேண்டிய கால அளவு	பேரவைமுன் வைக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
ஆ.	தமிழ்நாடு ஊரக வீட்டுவசதி மற்றும் உட்கட்டமைப்புவசதி மேம்பாட்டுக் கழகம்	2005–2006	31.03.2007	11.5.2012	5 வருடங்கள் 1 மாதம் 10 நாட்கள்
		2006–2007	31.03.2008	11.5.2012	4 வருடங்கள் 1 மாதம் 10 நாட்கள்
		2007–2008	31.03.2009	11.5.2012	3 வருடங்கள் 1 மாதம் 10 நாட்கள்
		2008–2009	31.03.2010	9.5.2013	3 வருடங்கள் 1 மாதம் 8 நாட்கள்
		2009–2010	31.03.2011	21.7.2014	3 வருடங்கள் 3 மாதங்கள் 20 நாட்கள்

துறையின் பதில்
(7)

தமிழ்நாடு ஊரக வீட்டு வசதி மற்றும் உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டுக் கழகத்திற்கு, பிரதம மந்திரி சாலை மேம்பாட்டு திட்டத்திற்கு ஒதுக்கப்படும் நிதி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பிரித்து வழங்கப்படுகிறது. இந்த பணிகள் சுனாமி திட்ட அலகுக்கு மாற்றப்பட்டு, சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதால் ஆண்டறிக்கைகள் சம்பந்தமாக பணிகள் மேற்கொள்ள இயலவில்லை. மீண்டும் இந்த பணிகள் சுனாமி திட்ட அலகிலிருந்து தமிழ்நாடு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறைக்கு மாற்றப்பட்டதால் கணக்குகள் முறையாக பெற இயலாத நிலை ஏற்பட்டது. நிறுவனத்தின் குழுமத்தை மாற்றி அமைப்பதில் ஏற்பட்ட காலதாமதத்தினாலும் குறிப்பிட்ட காலத்தில் ஆண்டறிக்கைகளை பேரவைமுன் வைக்கப்பட்டதில் காலதாமதம் ஏற்பட்டது. இனி வருங்காலங்களில் எந்தவிதமான காலதாமதம் இல்லாமல் பேரவையில் ஆண்டறிக்கைள் வைக்கப்படும்.

குழுவின் பரிந்துரை
(8)

துறை அளவில் துணைச் செயலாளர் அல்லது இணைச் செயலாளர் நிலையில், ஓர் ஒருங்கிணைப்பு அதிகாரியை (Nodal Officer) நியமித்து எதிர்காலத்தில் ஆண்டறிக்கைகளை உரிய காலத்தில் பேரவையில் சமர்ப்பிக்க கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

2. உயர்கல்வித் துறை

வரிசை எண்.	மன்றத்தின் பெயர்	நிதியாண்டு	பேரவைமுன் வைக்கப்பட வேண்டிய கால அளவு	பேரவைமுன் வைக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
அ.	தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்	2009-2010	31.03.2011	7.05.2012	1 வருடம் 1 மாதம் 6 நாட்கள்
		2010-2011	31.03.2012	6.02.2013	10 மாதங்கள் 5 நாட்கள்

துறையின் பதில் (7)	குழுவின் பரிந்துரை (8)
தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் 2009-2010 மற்றும் 2010-2011 ஆகிய ஆண்டுகளில் நிறுத்தப்பட்டு, செயலிழந்து இருந்த நிலையில், உடனடியாக கூட்டத்தை கூட்ட முடியாததால் அறிக்கையை உரிய காலத்தில் பேரவையில் வைக்க இயலவில்லை. 2012-ல் மீண்டும் செயல்படுத்தப்பட்ட தால் அறிக்கையை பேரவையில் வைக்க காலதாமதம்	ஆண்டுக்கணக்குகளை நிதியாண்டுக்குள் முடித்துவிட்டு உள்ளுறை நிதி தணிக்கை செய்து (Local Fund Audit) அதற்கான சான்றிதழ் பெறுதல் மற்றும் அந்த சான்றிதழை ஆண்டு பொதுக்குழுக் கூட்டத்தில் வைத்து ஒப்புதல் வாங்குவது போன்ற பணிகளை துறையில் நியமிக்கப்பட்டுள்ள ஒருங்கிணைப்பு அலுவலர் தான் (Nodal Officer) பொறுப்பேற்று

வரிசை எண்.	கழகத்தின் பெயர்	நிதியாண்டு	பேரவைமுன் வைக்கப்பட வேண்டிய கால அளவு	பேரவைமுன் வைக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
ஆ.	அண்ணா பல்கலைக் கழகம்	2005–2006	31.03.2007	1.02.2008	10 மாதங்கள்
		2006–2007	31.03.2008	20.07.2009	1 வருடம் 3 மாதங்கள் 19 நாட்கள்
		2007–2008	31.03.2009	12.11.2010	1 வருடம் 7 மாதங்கள் 11 நாட்கள்
		2008–2009	31.03.2010	2.05.2012	2 வருடங்கள் 1 மாதம்
		2009–2010	31.03.2011	28.09.2015	4 வருடங்கள் 5 மாதங்கள் 27 நாட்கள்

துறையின் பதில்
(7)

அண்ணா பல்கலைக் கழகத்தின் கணக்குகள் மீதான உள்ளுறை நிதித் தணிக்கைப் பிரிவின் (Local Fund Audit) தணிக்கை முடிந்து வருவதற்கு காலதாமதமாகிவிட்டது. நான்கு பல்கலைக் கழகங்களாக பிரிக்கப்பட்டு மீண்டும் 2011–ல் தான் அண்ணா பல்கலைக் கழகமாக ஒன்றாக சேர்க்கும் Process முடிந்தது. 2012–ல் அண்ணா பல்கலைக் கழகத்தின் எல்லா கணக்குகளையும் எடுத்து முடிக்க காலதாமதம் ஏற்பட்டது. இனி வருங்காலங்களில் அண்ணா பல்கலைக் கழகத்தின் கணக்குகளை உள்ளுறை நிதித் தணிக்கை (Local Fund Audit) பிரிவிற்கு அனுப்பிய பிறகு கண்காணிப்பு செய்து இதுபோன்று தவறுகள் ஏற்படாத வண்ணம் பார்த்துக்கொள்ளப்படும்.

குழுவின் பரிந்துரை
(8)

அந்தந்த வருடமே ஆண்டுக்கணக்குகளை தணிக்கை செய்து ஒரு வருட காலத்திற்குள் அறிக்கைகளை சட்டமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். துணைச் செயலாளர் நிலையில், ஒருங்கிணைப்பு அலுவலரை (Nodal Officer) நியமித்து மேற்படி பணிகளை கண்காணிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3. தகவல் தொழில் நுட்பவியல் துறை

வரிசை எண்.	நிறுவனத்தின் பெயர்	நிதியாண்டு	பேரவைமுன் வைக்கப்பட வேண்டிய கால அளவு	பேரவைமுன் வைக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
	தமிழ்நாடு மின்னணு நிறுவனம்	2010–2011	31.03.2012	31.10.2012	7 மாதங்கள்
		2011–2012	31.03.2013	30.10.2013	7 மாதங்கள்

துறையின் பதில் (7)	குழுவின் பரிந்துரை (8)
தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் 2010–2011–ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை சட்டமன்றப் பேரவைமுன் வைப்பதில் ஏற்பட்ட காலதாமதத்தை பொறுத்தவரை, ஜனவரி, 2012–ல் ஆண்டு பொதுக்குழுக் கூட்டம் நடத்தப்பட்டு, அதன் பின்னர் ஆண்டறிக்கையை அரசுக்கு சமர்ப்பிப்பதில் காலதாமதம் ஏற்பட்டது. அதன் தொடர்ச்சியாக 2011–2012–ஆம் ஆண்டிற்கான அறிக்கையினை அளிப்பதிலும் காலதாமதம் ஏற்பட்டது.	ஆண்டறிக்கைகளை பேரவைமுன் வைப்பதற்கான உரிய காலக்கெடுவினையும் அதற்குண்டான வழிமுறைகளையும் குழு ஏற்கெனவே வழங்கி இருக்கிறது. துறைச் செயலாளர்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்குத் தகுந்த அறிவுரைகளை வழங்கி உரிய காலத்தில் அறிக்கைகளை பேரவையில் வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். 2013–2014–ஆம் ஆண்டிற்கான அறிக்கை பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது. அதற்கு முந்தைய 2012–2013–ஆம் ஆண்டிற்கான அறிக்கை இதுவரை பேரவைக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அதற்கான காரணத்தை ஆய்வு செய்து முழுமையான விவர அறிக்கையை குழுவிற்கு அனுப்பிவைக்கவேண்டும்.

4. சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை

வரிசை எண்.	நிறுவனத்தின் பெயர்	நிதியாண்டு	பேரவைமுன் வைக்கப்பட வேண்டிய கால அளவு	பேரவைமுன் வைக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
	தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்	2005–2006	31.03.2007	22.10.2007	6 மாதங்கள் 21 நாட்கள்
		2010–2011	31.03.2012	13.05.2013	1 வருடம் 1 மாதம் 12 நாட்கள்
		2011–2012	31.03.2013	31.07.2014	1 வருடம் 4 மாதங்கள்
		2012–2013	31.03.2014	2.09.2015	1 வருடம் 5 மாதங்கள்

துறையின் பதில் (7)	குழுவின் பரிந்துரை (8)
வருமான வரித் துறையிடமிருந்து clearance வர தாமதமானது. ஜூன் மாதத்தில்தான் பொதுக்குழுவின் ஒப்புதல் பெற்றதால் 2005–2006–ஆம் ஆண்டிற்கான அறிக்கையை பேரவையில் காலதாமதமாக வைக்க நேரிட்டது. இனிவரும் காலங்களில் ஆண்டறிக்கைகள் காலதாமதமில்லாமல் பேரவையில் சமர்ப்பிக்கப்படும்.	ஆண்டறிக்கைகளை காலதாமதமாக பேரவையில் வைக்கும்போது சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் அவர்களின் சான்றொப்பத்துடன் ஒரு விவர அறிக்கை இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேலும், துறையின்கீழ் செயல்படும் நிறுவனங்களின் ஆண்டறிக்கைகளை உரிய காலத்திற்குள் பேரவையில் சமர்ப்பிப்பது தொடர்பாக மேலாண்மை இயக்குநருக்கு உரிய உத்தரவைப் பிறப்பிக்க, துறையில் துணைச் செயலாளர் அல்லது இணைச் செயலாளர் நிலையில், ஒருங்கிணைப்பு அதிகாரியை (Nodal Officer) நியமிக்க வேண்டும்.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS